செ.வெ.எண்: 496 பத்திரிக்கை செய்தி நாள்: 30.7.2011

மத்திய மோட்டார் வாகன விதி 50 மற்றும் 51-ன் படி அனைத்து வாகனங்களிலும் பதிவு எண் பலகை பொருத்தப்பட்டு இருக்க வேண்டும். மேற்கண்ட விதிகளின் படி பதிவு எண் பலகை பொருத்தப்படாமல் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு பதிவு எண்கள் எழுதப்பட்டு இயக்கப்படுகின்றன என மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனைத் தடுக்கும் நோக்கத்தோடு அனைத்து வாகன உரிமையாளர்களுக்கு இதன் மூலம் மேற்கண்ட விதிகளுக்குட்பட்டு 30 நாட்களுக்குள் பதிவு எண் பலகை பொருத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதில் தவறும் பட்சத்தில் விதிகளை மீறி இயக்கப்படும் மோட்டார் வாகனங்களின் பதிவுச் சான்றிதழ் மோட்டர் வாகனச்சட்டம் பிரிவு 53-ன் படி தற்காலிகமாக ரத்து செய்யப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இத்துறையில் உள்ள செயலாக்க பிரிவினரின் தீவிர தணிக்கைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

முறையான பதிவு எண் பலகை பொருத்தப்படாத அனைத்து வாகன உரிமையாளர்கள் 30 நாட்களுக்குள்/ 2011 ஆகஸ்டு மாத இறுதிக்குள் முறையான பதிவு எண் பலகையை பொருத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதில் தவறும் பட்சத்தில் அவ்வாகனங்களின் பதிவு சான்று தற்காலிகமாக இரத்து செய்யப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

பதிவு எண் பலகையில் இருக்க வேண்டிய எழுத்துக்களின் அளவு விவரங்கள் பின்வருமாறு.

**மாதிரி**

இரு சக்கர வாகனம் சீருந்து

100 mm | **TN 22** / **AB 1234** | 200 mm

45mm | TN22/AB 1234 | 285 mm

**TN22** / **AB 1234** | 120 mm | 500 mm

| வாகனவகை | உயரம் (மி.மீட்டர்) | தடிமன் (மி.மீட்டர்) | இடைவெளி (மி.மீட்டர்) |
|---|---|---|---|
| இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் | | | |
| முன் புறம் - எழுத்துக்கள் மற்றும் எண்கள் | 30 | 5 | 5 |
| பின் புறம் - எழுத்துக்கள் | 35 | 7 | 5 |
| பின் புறம் - எண்கள் | 40 | 7 | 5 |
| கார் மற்றும் இதர வாகனங்கள் | 65 | 10 | 10 |

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9